புதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது.

(1889)

# இந்துசாதனம்.

# THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

பத்திரக் கிரயம்.

| | |
|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: ஷ 1-க்கு | ரு. 5-60 |
| வெளியூர், இந்தியா: ,, | ரு. 9-40 |
| தொலைவாய்ப்பகுதி: ,, | ரு. 9-40 |
| தனிப்பிரதி: | சதம் 6 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

விளம்பர விகிதம்.

| | | |
|---|---|---|
| முதன் முறைக்கு:— | ஒருகலம் | ரு. 9-40 |
| ,, | அரைக்கலம் | ரு. 5-00 |
| ,, | கால்கலம் | ரு. 3-15 |
| ,, | ஒரு அங்குலம் | சதம் 65 |

அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—கூ௯. } யாழ்ப்பாணம்:—குரோதனஹு சித்திரைமீ கஅஉ; (1925 ஏப்பிரல்30) வியாழக்கிழமை. { இலக்கம்—அ௨.

உ
கணபதி துணை.

சீர்பூத்த கருவிநூ லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றேது
மதம்பூத்த விநாயகன்றாள் வணங்கி வாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

## விளம்பரம்.

இனும் காலண்டர் இனும்.

என்னிடம் கட்டிவெள்ளியிலும் 1-ம் நெ. 2-ம் நெ. வெள்ளியிலும் மிச்சம் நப்புரவாக வேலைமுடித்த முரசுகுத்தி கெங்காதாக்கொடி கைகோர்வை, முகப்புகொடி, காஞ்சி அரைக் கொடி, கால் தண்டை, கொலுசு, வகைகளும் கடயம் கங்கணம், மயிர்மாட்டி, ஒட்டியாண மும், இமிடேசன் செகப்பு சம்மல்தோடு கடுக்கன் மோதிரங்கள் இன்னும் இதாவெள்ளி தங்க நகைகளும் பட்டு பருத்தி முதலிய ஜவுளி நிறுசுகளும் விலைகள் சகாயம். விலாசம் தெரி வித்தால் பிரைஸ்லிஸ்டு அனுப்புகிறோம். சுபம்.

தெ. வெ. செனனிசெட்டி & சன்ஸ்
சராப், ஜவுளி ... ரம்
(H. 31.) குகை சேலம் ... இந்தியா.

அநேகபரிசுகள், மெடல்கள், நற்சாக்ஷிகள் பெற்று உலகெங்கும் புகழ்பெற்றது.

25—8—1923-ல் சென்னையில்நடந்த தமிழ்வைத்தியகான்பரன்ஸ் அன்டுமருந்துக்கண்காக்ஷியில் பஸ்கிளாஸ்(முதல்தர)தேவஔஷதங்களென தங்கமெடலும், வைத்தியபதிப்பட்டமும்பெற்ற



உலகம் புகழ்வது. உள்ள நாளும் மறவாதது.

பழனி, சி. எம். சாமி

## மகா வீரிய தங்க பஸ்பம்.

☞ வீரிய விர்த்தியில் மன்மதனுக் கோப்பாவர்.

பரீட்சைக்ஷக்கும் பலனுக்கும் உத்திரவாதம்.

இதை 1, ½ மண்டலம் சாப்பிட சகலவியாதியும் நீங்கி அபார வீரவிர்த்தியும், பசியும், ரத்தவிர்த்தியும் உண்டாகும். இது எல்லா மருந்துகளுக்கும் மேலானது. ஒரு முறைபரீக்ஷித்தால் உள்ளநாளும் மறவாதது. இது பிரபுக்களுக்கானது. இதன் அபார சக்தி உபயோகித்தவர்களுக்கே விளங்கும். இது வெகு சீக்கிரத்தில் வீரியத்தையும் பலத்தையும் கொடுத்து இழந்த ஆண்மைத்தனம் முழுவதும் திரும்ப உண்டாக்குகிறது. வெள்ளை, வெட்டை, பவுத்திரம், மூலம், நீரழிவு, க்ஷயம், இருமல், கபக்கட்டு, குன்மம், கருமேகம், குஷ்டம் முதலிய சகல கர்ம வியாதிகளும நீங்கும். பத்தியமில்லை.

1-மண்டலம் 48-நாள் பஸ்பம் ரூபா 20, அரைமண்டலம் 24-நாள் பஸ்பம் ரூபா 10.

### குருநாக பஸ்பம்-மூலத்திற்கு.

ஆப்ரேஷன் அவசியமில்லை. மூளை தானே கரையும். சீழ்மூலம், ரத்தமூலம், குத்தல், மூலமுளை, மலபந்தம முதலிய மூலம் ஒன்பதும் அதிசீக்கிரம் குணமாகும். உத்திரவாதமுள்ள சிறந்த ஔஷதம். புட்டி ஒன்றுக்கு ரூபா 4—0—0.

### குருதாளக பஸ்பம்-இருமலுக்கு.

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு; இருமல் கட்டசுவாசம், கோளை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும் சரி 8 வித காசமும் அவசியம் தீரும். அநுபவத்தில் கைகண்டது. புட்டி ஒன்றுக்கு ரூபா 4.

### கெர்ப்ப எண்ணை.

இது ஸ்திரீகள் சஞ்சீவி என்னலாம். மாதாந்திர வயிற்றுவலியை உடனே நிறுத்தும். சரியாய் பஹிஷ்டையாகும். கெர்ப்பாசயம், சினைப்பை இவற்றிலுள்ள சகலகெடுதல்களும் நீங்கி கெர்ப்பமுண்டாகும் மிக்க அநுபவமானது. புட்டி ஒன்றுக்கு விலை ரூபா 2.

### மாந்திரீக சத்து.

இதை அணிந்துகொண்டால் சகலவசியம், நினைத்தகாரியசித்தி, தனலாபம், புத்திரசந்தானம், தெய்வதுணை உண்டாகும். செய்வினை, பேய், பிசாசு, குழந்தைகளின் பிணி முதலியன நீங்கும். சத்து1-க்கு ரூபா 2—0—0. 6-சத்து ரூபா 10—0—0.

**ரோம சங்காரி** ஐந்தே நிமிஷத்தில் ரோமத்தை நீக்கும். எரியாது தோல் கெடாது. புட்டி 1-க்கு அணு 8.

### சர்வபடை நிவாரணி.

சகலமேகப்படை, ஊரல், பூச்சிகடி, வண்டுகடி, படர்தாமரை இவைகள்ஒரேநாளில் உதிர்ந்துவிடும் உடனே அரிப்பு நிற்கும் தோல் கெடாது. புட்டி 1 க்கு விலை அணு 8.

### பிரமேக நிவாரணி.

நாட்பட்ட பிரமேகம். தந்திமேகம், வெள்ளை, வெட்டை, நீர்சுருக்கு, எரிச்சல், குத்தல் உடனே நிற்கும். நிச்சயமாய் 3-வேளையில் தீரும் தவறாது. புட்டி ஒன்றுக்கு விலை ரூபா 2.
வி. பி. சார்ஜ் வேறு.

சித்தஆயுள்வேத டாக்டர்,
சி. மலையப்பசாமிப்பிள்ளை.
நித்தியானந்த மெடிக்கல்ஹால், பழனி.

(Q.60 B.)

[ESTABLISHED 1909].

**MESSRS. A. S. M. A. KHADER BROTHERS**
**Kairul Muslimeen Medical Hall**
**PORTONOVO** (*SouthArcotDistrict*).

### ஏ ஜ ன் டு தே வை.

குழிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொள்வதுபோல்
வீண் ஆடம்பரமான விளம்பரங்களைக் கண்டு மிரண்டுவிடாதீர்கள்.

அடியிற் கண்ட லேகியத்திற்காக ரூபா 1000 இனுமளிக்கப்படும்.

இந்த லேகியம் சாப்பிட்ட 3மணி நேரத்திற்கெல்லாம் சப்த தாதுக்களின் பலத்தையும் வீரிய உற்சாக தத்துவத்தையு மடைவிக்கச் செய்யவில்லையென்றுவது பரீட்சைசெய்யும் அன்பர்களுக்கு பலனைக் கொடுக்கவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் சொல்லுகிறவர்களின் பணத்தை உடனே வாப்ஸ் கொடுத்துவிடப்படும்.

அசல் பாகம் சந்தோஷிக்கச் செய்வது

உத்தரவாதமுள்ளது.

## சித்தஜானந்த சிட்டுக்குருவி லேகியம்.

இந்த லேகியம் முற்காலத்து மன்னர்களால் உபயோகித்து வீரியசக்தி குறையாது இல்லற இன்பவாழ்க்கையையடைந்து புத்திர பௌத்திர சம்பன்னராய் நீடூழி வாழும்பொருட்டே நமது முன்னோர்களால் கூறப்பட்ட பழைய ஏட்டுப்பிரதிகளிலுள்ள ஔஷத பாகங்களிற் சிறந்ததும், இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களை அடையக்கூடியதுமான ஒப்பற்றஓர்புருஷசஞ்சீவியாகின்றது. மற்றவிபரங்களை நமதுகேட்லாக்கில்காணலாம்.

### லேகியத்தின் முக்கிய குணமாவது.

வாத பித்த சிலேத்ம மிகுதி குறைவால் ஏற்படும் இரத்தக்குறைவு, ஏழுவகைத்தாதுக்களின் பலஹீனம், அஸ்தி வெட்டைச்சூடு, பிரமேகவெட்டை, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, நீர்ச்சுருக்கு, நீர்எரிச்சல், நீர்த்தாரை பெருத்தல் ஆகிய நோய்களையும், நித்திரையில் அடிக்கடி உண்டாகும் தாதுநஷ்டம், நித்திரைப்பங்கம், SPERMATORRHEA, தேகமெலிவு, சதாஇடுப்புவலி, கைகாலசதி, மலச்சிக்கல், பசிமந்தம், தேகத்தில் பலவிடங்களிலும் ஓடித்திரியும் பலவித வாய்வுகள், ... NERVOUSDISEASES ... நோய்களைச் சுகப்படுத்தி, புதியமேனியுடன் இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களைப் பெறுவதில் இதைவிடச் சிறந்த மருந்து கிடைப்பது அரிதினுமரிது. இச்சிறந்த அபூர்வலேகியத்தின் ஆச்சரிய குணத்தை உடனேக்குடன் அறியவேண்டியதென்றே ஜனனுகூல நன்மைக்காக இதனை மிகவுங் குறைந்த விலைக்கு வெளியிட்டிருக்கின்றோம்.

40 நாள் சாப்பிடும் பெரியடப்பி 1-க்கு விலை ரூபா 8—0—0.
20 நாள் சாப்பிடும் சிறியடப்பி 1-க்கு விலை ரூபா 4—0—0.
வி. பி. தபாற் செலவு பிரத்தியேகம்

முற்பணமனுப்பினுல் V. P. தபாற்செலவு இனும். பினங்கு, சிங்கப்பூர், கிள்ளான், கோலாலம்பூர், பேரா முதலிய பிறதேசவாசிகள் மருந்தின் கிரயமும், தபால்சார்ஜு ரூபா 2ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். மேற்படியூர்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது.

இச்சிறந்த லேகியமானது சிட்டுக்குருவியின் கிருதம் அதாவது மேற்படி குருவியின் சத்தால் செய்யப்படவில்லையென்றுவது, அல்லது இந்த லேகியத்தைச் சாப்பிட்டதால் குணமொன்றுஞ் செய்யவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் ரூபிப்பவர்களுக்கு அவர்கள் கொடுத்த மருந்தின் கிரயமும் ரூபா 1000 இனுமாயும் கொடுக்கப்படும். அப்படி ரூபித்தும் இனுமுடையபணமும் கிரயமும் கொடுபடா விட்டால் கோட்டுமூலமாக வசூல்செய்துகொள்ளலாம். அதனறியும் மற்றக் கம்பெனியாரின் இத்தகையான குருவிலேகியங்களுக்கு இப்படிப்பட்ட ஆச்சரியகுணமுண்டென்றுவது, அல்லது இச்சிறந்த குண பாக லேகியத்தைச் செய்து காட்டினுலாவது முன் கண்ட இனும் கொடுக்கப்படுமென்பதற்கு உத்திரவாதமளிக்கப்படும்.

TEL. ADDRESS:—
Khader Bros.
Porto Novo.

என்மேல்விலாசம்:—
மெஸ்ஸர்ஸ் ஏ. எஸ். எம். ஏ. காதர் பிரதர்ஸ்,
கைறுல் முஸ்லிமீன் வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை, தென்னுற்காடு ஜில்லா.

(Y. 38).

## அதிசிரேஷ்டமான தைலம்.


காரகண்டிப்பான மனுஷனே ஸ்திரீயோ சரியென மதிக்கும்படியான அநேக முக்கிய சரக்குகள் சேர்ந்த தைலம்

### லிட்டில்ஸ் ஓரியன்றல் பாம்.

இதர தைலங்களைவிட இது ஏன் சிரேஷ்டம்?

1. நோவைக் குணமாக்கும் 12 திவ்விய சரக்குகள் சேர்ந்தது.
2. அவைகளின் சாரத்தை அது தன் திட—திராவ மூலகாரணத்திலடக்கி வைத்திருக்கிறது.
3. அதில் வீணுப்போகும் தன்மையே கிடையாது. தினையளவு தைலம் பனையளவு குணத்தைத்தரும்.
4. அதில் அன்னியபொருள் சேர்ப்பில்லை.
5. அதில் மிருகக்கொழுப்பேயில்லை.
6. அது குணஞ்செய்யும். குணமுடையது.

3—L—25.




(Y. 41. A.)

## தேக்கமரம்.

புதிதாக வருவிக்கப்பெற்ற திறமான தேக்க மரங்கள், நீளம் 6 அடிதொடக்கம் 30 அடி வரையிலுள்ளன. கனம் 10 அங்குலம் தொடக்கம் 20 அங்குலம்வரையிலுள்ளன. நீண்ட மரங்கள் குறைவாயிருப்பதினால், எம்மிடம் வழக்கமாயெடுப்பவர்கள் தங்கள் ஆடர்களை ஏற்கனவே செய்துகொள்ளவேண்டியது.)

S. வீரகத்திப்பிள்ளை,
தொண்டமானாறு,

சந்திவிலாசம்
ஆ பி. வல்லுவெட்டித்துறை.
(H. 37.)



# இந்து சாதனம்

யாழ்ப்பாணம்:— குரோதன வூ
சித்திரைமீ சகஉ வியாழக்கிழமை.



## நாம் ஈடேறுவதற்குத் தக்க வழிகள்.

ஒரு சாதி அல்லது ஒரு தேசம் சிறக்க வேண்டுமோயின் அது பெரும்பான்மையும் சயநலங் கருதாது பிறருக்காகச் சிரமப்பட்டு உழைக்குந் தன்மை உடையதாக இருக்க வேண்டும். அதுவே பரோபகாரமெனப்படும். இப்பரோபகார முடையோரால் கைத்தொழில், வியாபாரம், கமச்செய்கை, உண்மைக் கல்வி, புதினப்பத்திரிகை, சங்கம் என்னும் இவை முதலியன சிறப்படைதல் வேண்டும். இவைகள் இங்கு ஆரம்பிக்கப்பட்டன வேயல்லாது இங்குள்ளார்க்கு நன்மைபயப் பனவாகக் காணேம். மேற்கூறிய தொழில் களிற் பிரவேசிப்போர் தேசநன்மையின்பொருட்டு ஆரம்பித்தாலும் தமது சயநலங்கருதிச் சில முறைகளை அனுஷ்டிப்பதினாலேயே அவை விருத்தியெய்தாதொழிகின்றன. அச்சிலமுறைகள் மேற்கூறப்பட்டதொழில்களிற் பிரவேசித்துள்ளவர்களை வெவ்வேறாகப் பிரித்துவிடுகின்றன. இதனால் அத்தொழில்கள் ஈனதசையடைந்தும் இல்லாதொழிந்தும் போகின்றன. நம்மவர்களிற் பெரும்பாலார் தொழிலிற் பிரவேசித்தாலும் தமது நன்மை கருதிச் சில முறைகளை அநுஷ்டியாது விடுவதில்லை. உதாரணமாக நமதுமுன்னோர்பலர் ஆலயம், மடம், கிணறு முதலியவற்றை அமைத்து அவை என்றும் தளர்வின்றி நடைபெறுதற்கு வேண்டியமார்க்கங்களையும் வகுத்து அச்சிவதருமத்தை நடாத்தும் அதிகாரத்தைமாத்திரம் தமக்கும் தமக்குப்பின் தமது சந்ததியினர்க்கும் பிரத்தியேகப்படுத்தி வைத்துச்சென்றனர். பிற்சந்ததியினர் அவற்றைத் தருமச்சொத்தெனச் சிறிதும் மதியாது தம்மனம் போனவாறு அழித்தும் கெடுத்தும் விற்றும் துர்விநியோகஞ் செய்வாராயினர். அவர்களின் சந்ததியார் பெரும்பாலும் இப்பொழுது குருடராயும் செவிடராயும் பயித்தியகாரராயும் வீணராயும்அலைந்துதிரிவதைப் பிரத்தியட்சமாகக் காணலாம். அவர்கள் அத்தருமங்களை ஊரார்பொறுப்பில் வைத்திருப்பரேல் அவை பிற்சந்ததியினர்க்கு என்றும் பெருநன்மை பயக்குமென்பது திண்ணம். இப்பிற்சந்ததியினர் இந்நிலையெய்தியமைக்கு மேற்படி தருமத்தைச் செய்த முன்னோர்களே காரணராவர். இதுபோலவே தேச ஈடேற்றத்தின் பொருட்டுச் செய்யப்படுகின்ற தொழில்களு மிருக்கின்றனவெனலாம்.

மேல்நாட்டார் நூறு இருநூறு வருடங்களுக்குப்பின் பலனைக்கொடுப்பதும், அக்கால எல்லைவரையும் அதிக பணத்தை அழிவு செய்வதுமாகிய சில தொழில்களைத்தாமும் தம்தேச முன்னேற்றத்தின்பொருட்டுச் செய்கின்றார்கள். அங்ஙனஞ்செய்வோர் தம்மிடத்துள்ள செல்வம் முழுவதும் அழிந்தும் தரித்திரதசையடைந்துபேரிடருற்றும் எடுத்தமுயற்சியிற் கண்ணுங் கருத்துமா யிருக்கின்றனர். அவை எற்றைகாலத்திற் பலனைக் கொடுக்கத் தொடங்குகின்றன. அதனால், அவர்கள் திரண்ட செல்வத்தைச் சம்பாதிக்கின்றார்கள். அத்தொழில் அவர்கள் பிற்சந்ததியினரைக் கண்ணியப்படுத்துகின்றது; அங்குள்ள ஆயிரக் கணக்கான சனங்களின் சீவியத்துக்கு வழிகாட்டுகின்றது; ஏனைச் சாதியாரையும் பிறதேசங்களையும் தங்கீழ்ப்படுத்தத் துணைபுரிகின்றது. அவர்களிடத்திலேயே தேசாபிமானம் குடிகொண்டிருக்கின்றது. இந்த அபிமானம் "சுயநலம்" என்னும் குரூர நோயை அறவே அழித்துவிடுகின்றது. அவர்கள் ஆரம்பிக்கும் தொழில்கள் ஒவ்வொன்றும் தங்கள் தேச முன்னேற்றத்தின் பொருட்டே நடாத்தப்படுகின்றன. அதனால் அவர்களுடைய தொழில்கள் சிறந்து வளருகின்றன. அத்தொழில்களாலே தேசம் முன்னேறு மென்னும் நம்பிக்கை அவர்களிடம் அதிகமாகவுண்டு. ஒருதொழிலை ஆரம்பித்த ஒருவர் சிறிது சோர்வடையும் போது அங்குள்ள தனவந்தர் தம்மிடத்துள்ள பணம் முழுவதையும் அதற்காக அர்ப்பணஞ்செய்து இன்றியமையாத் துணை புரிவர்.

இன்னோரன்ன பலமுறைகளும் சிறிதும் சயநலங் கருதாப் பெருந்தன்மையும் இங்கு அனுசரிக்கப்படவேண்டும். எத்தொழிலில் எவர் பிரவேசித்தாலும் அவர் தனக்கென ஏதோ ஒருநன்மைகருதியே ஆரம்பிக்கின்றனரென்ற அபிப்பிராயம் இங்குள்ளாரிடம் உதித்துவிடுகின்றது. நாம் ஆரம்பிக்கும் எத்தொழிலேனும் அது சிறக்கவேண்டுமோயின் அவ்வித அபிப்பிராயம் சிறிதுமில்லாது நீங்கப் பெற்றதாயிருத்தல்வேண்டும். சிங்களர் பல தொழில்களிலும் தலையிட்டு முன்னேறிவருவதையேனும் நம்மவர்கள் சிறிதுசிந்திக்கலாகாதா? அவர்கள் உத்தியோகம், வியாபாரம், கைத்தொழில், சிற்பம்முதலியதொழில்களில் முன்னேறிவருவதும், நாம் இந்நிலையிலிருப்பதும் காலகதியில் எம்மைக் கீழான நிலைமையில் இருத்துமென்பது திண்ணம்.

## சமயகுரவர் இருவரும் சாயுச்சிய மடைந்தமை.

(யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மண்டபத்தில் சச்சிதானந்த ராஜயோகிகளின் இருபதாகாட் பிரசங்கம்.)

முற்றொடர்.

திருப்புகலூரென்னும் சிவஸ்தலம் ஆதியில் அக்கினிதேவனாற் பூசிக்கப்பெற்றது. முருககாயனாராற் புஷ்பத் திருத்தொண்டு செய்யப்பெற்றதும், சுந்தரமூர்த்திநாயனார் "தம்மையேபுகழ்ந்திச்சை பேசினும்" என்னும் சொற்றொடரையுடைய தேவாரத்திருப்பதிகம் பாடிச் செங்கற்களைப் பொன்னாக்கியதும் இத்தலத்திலேயாம். திருநாவுக்கரசுநாயனார் சில காலம் இத்தலத்திலே திருத்தொண்டு செய்து வீற்றிருந்தார்; அந்நாட்களில் "இருநிலனாய்த் தீயாகி" என்னும் சொற்றொடரையுடைய நின்றதிருத்தாண்டகமும், தனித்திருத்தாண்டகமும், "தில்லைச்சிற்றம்பலம்" என்னும் சொற்றொடரையுடைய க்ஷேத்திரக் கோவையும், குறைந்த திருநேரிசையும், தனித்திருநேரிசையும், ஆருயிர்த் திருவிருத்தமும் ஏனைப் பலபதிகங்களும் பாடியருளினார். வாகீசர் இப்பூம்புகலூரிலே உழவாரத் திருத்தொண்டுசெய்யுங்கால் அவர் மூவாசையுமற்ற மெய்யடியாரென்பதை உலகமறிந்து அவரைப்பின்பற்றிஉய்யும்பொருட்டுச் சிவபெருமான் ஓர் திருவிளையாடலைச் செய்யத்திருவுள்ளங் கொண்டார். வாகீசர் உழவாரத்திருத்தொண்டு செய்யும் இடங்களிலே நவரத்தினங்கள் பொலிந்து தோன்றின. "ஒடும் பொன்னும், உறவும் பகையும், கேடும் செல்வமும், கீர்த்தியும் நிந்தையும், வீடும் நரகமும் வேறறநோக்கும்" எமது சமயாசாரியர் அந்த நவரத்தினங்களைப் பருக்கைக்கற்களை ஒப்ப மதித்து உழவாரத்திலேந்தி அங்குள்ள வாவியினுள் வீசினார். அதன்பின்னர்ப் பூம்புகலூர் நாதருடைய திருவருளால் அரமகளிர்கள் விண்ணுலகினின்று மண்ணுலகில் இறங்கி அப்பமூர்த்தி முன்னாயினார்கள். அப்பெண்கள் தங்கள் செங்கனிவாய் மலர்ந்து இனியபாடல்களைப் பாடினார்கள்; மின்னற் கொடிபோல் அங்குமிங்கும் அசைந்து ஆடினார்கள்; மலர்களை வாரிமழைபோற்சொரிந்தார்கள்; ஒருங்கு சேர்ந்தார்கள்; பிரிந்து தனித்தனி சென்றார்கள்; அவருடைய திடசித்தத்தைக் கெடுப்பதற்குத் தம்மாலான முறைகளையெல்லாம் அனுஷ்டித்தார்கள். அவ்வெத்தனங்கள் எல்லாம் பயன்படாதொழிந்தன. அந்தத் தெய்வமகளிரது செயல்களாற் சிறிதும் இடறப்பெறாத திருவருள் ஞானச்செல்வராகிய நாவினுக்கரசர் இப்பிறப்பில் அநுபவிக்கவேண்டிய நல்வினை தீவினை என்னும் இரண்டையும் முன்னிலைப்படுத்தி உம்மால் நாம் இடர்ப்படோம்; திருவாரூர் அம்மானுக்கு ஆளானோம்; நீங்கள் எம்மை வருத்தாதொழிவீர்கள் என்னுங் குறிப்புக்களை உடையதும் "பொய்மாயப் பெருங்கடலில்" என்னும் சொற்றொடரையுடையதுமாகிய திருவாரூர்த்திருத்தாண்டகம் பாடியருளினார். இனைப்பதொன்றும் பேசுவது மற்றொன்றும் செய்வது இன்னொன்றுமான தன்மைகளையுடைய அரமகளிர் தங் கருமம் கைகூடப்பெறாமையினால் எமது சமயாசாரியருடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கிச் சென்றார்கள். வாகீசரும் அத்தலத்தில் சில நாள் வீற்றிருந்தனர். அங்கு எழுந்தருளியிருக்கும்போது திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருநல்லூர்ப் பெருமணத்திலே மெய்யடியார் கூட்டத்துடன் சிவசாயுச்சியமெய்திய சமாசாரத்தைக் கேள்வியுற்றார். அவர் தாம் அத்திருமணத்தைத் தரிசிக்கப் பெறாதமை பற்றி ஆறுத்துயருற்றார்; திருப்புகலூர் நாதரைக் குறையிரந்து பல திருப்பதிகங்கள் பாடியருளினார்.

நிரதிசய இன்பம் பயக்கும் அருண்ஞானத்தைப்பெற்ற நாயனாது பேரன்பு முறுகிவளர்ந்தது. அவர் களங்கஞ் சிறிதுமின்றி ஞானப்பிரகாசராய் விளங்கினார். ஆறலைத்துண்ணும் ஐம்புலவேடரும் அவர் வழிப்பட்டனர். மனம்முதலான அந்தக்கரணங்கள் நான்கும் ஒருமைப்பாடெய்தின. அவர் திருப்புகலூர் நாதருடைய திருவடிகளே இனி எமக்குப் புகலிடம்; அவருக்கே நாம் மீளா அடிமை; அப்பரமகருணாநிதியைச் சரணடைந்த அடியேன் இச்சிவக்ஷேத்திரத்திலேயே "ஈசன் பல்கணத்தெண்ணப்பட்டு, சிறுமானேந்தி தன் சேவடிக்கீழ்ச் சென்றங் கிறுமாந்திருப்பன்" எனத் திருவுள்ளங்கொண்டார். அவர் முற்சென்ம வாசனைகளை நன்குணர்ந்தார். உலகம் உய்ந்து ஈடேறும்பொருட்டு எமது சமயாசாரியராகத் திருவவதாரஞ் செய்த வாகீசர் தமது கடமையைத் திருவருளின்பாற்பட்டு நின்று இனிது நிறைவேற்றியபின் பூம்புகலூர் ஈசனுடைய சந்நிதானத்தில் நின்று "எண்ணுகேன் என்சொல்லி" என்னும் சொற்றொடரையுடைய திருத்தாண்டகம் பாடியருளினார். அப்பதிகப் பாடல்களின் ஈற்றில் "புண்ணியா வுன்னடிக்கே போதுகின்றேன்; சிங்கமே யுன்னடிக்கே போதுகின்றேன்; பொய்யுரையா துன்னடிக்கே போதுகின்றேன்; பொருளாவா யுன்னடிக்கே போதுகின்றேன்; போரேறே யுன்னடிக்கே போதுகின்றேன்; புரிசடையா யுன்னடிக்கே போதுகின்றேன்; பூவார்ந்த பொன்னடிக்கே போதுகின்றேன்; பொய்யாத சேவடிக்கே போதுகின்றேன்; பொன்னங் கழலடிக்கே போதுகின்றேன்; பொருவரையா யுன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர் மேவிய புண்ணியனே" எனப் பாடியருளினார். ஆலயத்தினுள்ளே ஒரு பெருஞ் சோதி தோன்றியது. தேவர்கள் பூமழை பொழிந்தனர். பிரமா விட்டுணு இந்திரன் முதலினோரும் முனிவரும் சித்தவித்தியாதரர் கருட காந்தருவரும் ஆனந்த சாகரத்தில் அழுந்தினார்கள். எமது சமயாசாரியராகிய திருநாவுக்கரசுநாயனார் கற்பனை கடந்த அச்சோதியுட் கலந்து சிவசாயுச்சியப் பெரும்பே றெய்தியருளினார். நாயனாரின் திருவுருவம் அங்குள்ள வாதாபிகணபதிக்குப் பக்கத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. தாண்டகவேந்தர் முத்தியடைந்த தினம் சித்திரை மாசச் சதயநட்சத்திரசுபதினமாகிய இன்றாகும்.

இச்சமயாசாரியருடைய திருவவதாரத்தினாற் புறச்சமயங்கள் மாய்ந்தன; சுத்தாத்துவித சைவ சித்தாந்தம் சுடர்விட்டுச் சோதியாய் விளங்குகின்றது; தாசமார்க்கம் தலைசிறந்தது; சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நான்கு பாதங்களையும் அநுஷ்டிக்கும் மெய்யடியார்கள் பெருவாழ்வு எய்தினர்; "ஈசனெந்தை யிணையடி நீழல்" மகத்துவம் இனிது விளங்கப்பெற்றது; ஸ்ரீபஞ்சாட்சரத்தின் பெருமை அகிலலோகங்களிலும் பிரசித்தப்படுத்தப்பெற்றது; விபூதி உருத்திராக்கம் முதலிய சிவசின்னங்கள்பெரிதும் போற்றி அணியப்பெற்றன; ஆலயதரிசனம் ஆலயத்தில் அலகிடல் மெழுக்கிடல் தீபமேற்றுதல் தூபமிடுதல் முதலான திருத்தொண்டுகள் பெரிதும் போற்றப்பெற்றன; சுருங்கக் கூறின் உலகம் உய்ந்து ஈடேறியதெனலாம். இத்துணைப் பெரும்பே றெல்லாவற்றையும் எமக்கு விளக்கிக் காட்டி எம்மை ஈடேற்றும்பொருட்டுத் திருவவதாரம் செய்த சமயாசாரியாராகும் திருநாவுக்கரசு நாயனாருடைய குருபூசை எங்கெங்கும் இனிது நடைபெறுவதாக. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் சுந்தரமூர்த்திநாயனார் மாணிக்கவாசகசுவாமிகள் என்னும் சமயாசாரியர் மூவர் குருபூசையும் அவ்வத் தினங்களிற் சிறப்புடன் நடைபெறுவதாக. ஏனைச் சிவனடியார்களுடைய குருபூசையும் சைவநன்மக்களால் நன்கு நடாத்தப்பெறுவதாக. மெய்யடியார்களுடைய திவ்விய சரித்திரங்கள் அன்பர்களுடைய சிந்தையிற் குடிகொண்டிருப்பதாக. இத் திவ்வியசரித்திரம் நடைபெற்ற இந்த இந்துக் கல்லூரியானது அஷ்ட லக்குமி கடாட்சத்தோடு நாமகள் கடாட்சமும் பெற்று மேலோங்கி நிலவுவதாக. யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருடைய வேண்டுகோளின்படி திருநாவுக்கரசுநாயனாருடைய திவ்விய சரித்திரத்தைத் திருவருளை முன்னிட்டு ஏதோ தெரிந்தவரையிற் கூறி, டிை நாயனார் சிவசாயுச்சிய மெய்தியதும், சித்திரைச் சதயநட்சத்திரசுபதினமுமாகிய இன்று முற்றுப்பெறச் செய்தேம்; "மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்."

## உலகம் பலவிதம்.

"இடம் பொருள் ஏவலும் பிறவும் எமது கைவசமாயிருக்கின்றன. எவ்வித துர்க்கருமங்களையும் சிறிதும் அஞ்சாது செய்வேம். நீதிவழியில் நடக்கவேண்டுமென்ற சிந்தனை எமக்குச் சிறிதுமில்லை. எந்த இடத்திலும் எமது அதிகாரம் செல்லும். இராசசபையிலும் நீதிஸ்தலங்களிலும் எமது வாக்கையே எவர்களும் அங்கீகரிப்பர். எந்த நியாயதாரதாரும் எமது கூற்றையே நியாயமென வாதிப்பர். ஏதோ அந்தக்காலத்திலே தருமதேவதை என்று ஒன்று இருந்ததாம். அது நாலு பாதங்களில் நடந்ததாம். அசுரர்கள் தேவர்களை வருத்தினர்களாம். அதன்பொருட்டு 'இன்னொருநாளில் இக்கிறக்காகத், தன் முதுகெலும்பைத் ததீசி மாமுனிவர், கொடுத்துமே யிந்தக் குவலயந் தன்னில், அடைந்தனர் கீர்த்தி' யாம். பின்னொரு நாளில் 'பசுவின்கன்று தேர்க்காலிடைப்பட்டு, இறந்தமைகண்ட ஈன்ற தாய் துயரம், போக்கிடுமாறு (மனுநீதி கண்ட சோழன் தான் பெற்ற) புத்திரன் றன்னுயிர், நீக்கின'னும். இன்னும் இவை போன்ற சில சரித்திரங்களைப்பற்றி ஒரு சிலர் பிரசங்கஞ்செய்துகொண்டு திரிகின்றார்கள். 'எவ்வுயிரும் பராபரன் சந்நிதியதாகு'மாம்; எந்தச் சீவனிடத்தும் கருணை கூரவேண்டுமாம்; கொலை செய்யக்கூடாதாம்; இன்னும் ஏதேதோ வாயில்வந்தபடி யெல்லாம் பிதற்றினார்கள்; அவர்கள் எம்மையுந் தேடி வந்துவிட்டார்களே; எம்மைத் தேடி எமது இடத்துக்கு வந்தவர்களை மனம் வருந்தச் செய்வது சரியல்ல; கோவிலில் ஆடுகோழி வெட்டுவது எமக்கும் சம்மதமன்று; எமது ஊரவர்கள் சிறிதும் உணர்ச்சியில்லாத மாங்கள்; உயிர்க்கொலை செய்யாமலிருக்கமாட்டார்கள் என்று அவர்களுக்காகப் பரிந்து பேசி அவர்களைச் சிறிது தூரம் அழைத்துச் சென்று வழிவிட்டு மீண்டேம்; இவ்வருடம் உயிர்க்கொலையினாலே ஆயிரத்து இருநூற்றுப்பத்தென்பது ரூபா கிடைத்தது; கொலை நிறுத்தப்பட்டால் இப்பணத்தை யார் தருவது?" என்று பூசாரி ஆடுகோழிகளை வயிறார விழுங்கிய சிலருடன் பேசிக்கொண்டிருந்தனன்.

* * *

"பலகாலமாக நடைபெற்றுவந்த இக்கொலையை நாம் ஒருபோதுங் கைவிடக்கூடாது. ஆனால் இக்கொலை மகா பாதகமென்பது உண்மைதான்" என்று சொல்லிக்கொண்டு பூசாரி அவசிய கருமஞ் செய்யவேண்டிச் சென்றான். அவனுடைய உடல் நடுங்கியது; கண்கள் ஒளி மழுங்கின; நிற்கமுடியாது பூமியில்வீழ்ந்தனன். வாயிலிருந்தும் மூக்கிலிருந்தும் இரத்தம் ஆறுபோற் பெருகியது. பூசாரி மூன்று வாரமாக எவர்களாலுந் தாங்குதற்கரிய கஷ்டத்தை அனுபவிக்க நேர்ந்தது. பார்க்கச் சென்றவர்களிடம் "ஐயோ! நான் படுபாவி; இலட்சக்கணக்கான ஆடுகளையும் கோழிகளையும் அவை கதறிப் பதறித் துடிக்கக் கொன்ற சண்டாளன். அவைகள் இந்த ஆபத்தானவேளையில் என்னைச் சித்திரவதை செய்யும்பொருட்டு இங்கு வந்து சூழ்ந்து நிற்கின்றன. வருடந்தோறும் நான் கொடுத்த ஆட்டுத்தலைகளையும் கோழித்தலைகளையும் வயிறார உண்ட நீங்கள் இப்போது நான்படுங் கஷ்டங்களைப் பார்த்துக்கொண்டிருக்கிறீர்களா? ஐயோ! என் பிராணன் போகிறதே" என்று பூசாரி கதறுவது கேட்ட மாங்கள்தாமும் உருகின. சிறிதுவேளையிற் பூசாரியின் மூச்சு நின்றது; உயிர் தென்புலம்போயது. இக்கொலையிற் சம்பந்தப்பட்ட பலரும் கொடுநோய் வாய்ப்பட்டு வின்னுற்றார்கள். அங்குள்ள சிரேஷ்ட நீதிபதியாகிய பிரம ஸ்ரீ சாம்பசிவ ஐயரவர்கள் இவ்வழக்கை விசாரணைசெய்வாராயினர். குற்றவாளிகள் எல்லோரும் நிரைநிரையாக நிறுத்தப்பட்டனர். இருகிங்கரர் பூசாரியைக் கொண்டுவந்து நிறுத்தி இருபக்கங்களிலும் நின்றார்கள். பூசாரியின் தேகம் முழுவதும் ஈட்டி வாள் குறடு முட்கம்பிகள் என்னு மிவற்றால் ஊறுபடுத்தப்பட்டிருந்தது. இங்குள்ள கோடுகளில் நடைபெறுவதுபோலச் சாட்சிகளை விசாரிப்பதும், உண்மை எவ்விதமாயினும் அது ஒரு புறமிருக்கப் "பினல்கோட்" பிரமாணத்தைக் கையில் வைத்துக்கொண்டு அதற்கியைய நியாய

னாக்தரர் வாதிப்பதும், பணத்தினாலும் அதிகாரத்தினாலும் வழக்கை வெல்லுத லும் அங்கே நடைபெறமாட்டா. முன் னும் பின்னுமுள்ள விஷயங்களை மறைத் துக்கொண்டிருக்கும் திரை நீக்கப்பட் டது. எதிரிகள் தாம் செய்த நன்மை தீமை முழுவதையும் உணர்ந்துகொண் டார்கள். இக்கொலையினால் எரிவாய்நரகை அடையவேண்டிநேர்ந்த விஷயமும் அவர் களுக்குப் புலப்பட்டது. நீதிபதி பூசாரி யை ஒழிந்த ஏனையகுற்றவாளிகளை நோக்கி "நீங்கள் ஒவ்வொருவரும் அநேக ஆடுகளை யும் கோழிகளையும் படுகொலை செய்திருக் கிறீர்கள். எத்தனை சீவர்களைக் கொன்றீர் களோ அத்தனை சீவர்களும் உங்களைக் கொன்றுதீரவேண்டும். அதற்காக நீங்கள் அத்தனை பிறவியும் எடுக்க வேண்டும்" என்று தீர்ப்புக் கூறினர்.

* * *

"இலட்சக்கணக்கான உயிர்கள் கொலை செய்யப்பட நேர்ந்தமைக்கும், உன்னு டன் சேர்ந்த ஏனைக் குற்றவாளிகள் இக் கதிக்காளானமைக்கும் நீயே மூலகார ணன். ஆலயத்தில் நடைபெறுந் துர்க் கருமங்களைத் தடுப்பதற்குப் பூரண சுதந் தரம் உன்னிடத்திருக்கின்றது. நீ இந் தப் பிறப்பில் இரண்டிலட்சத்து நாற்பத் தெண்ணாயிரத்து இருநூற்றுப் பதினறு சீவர்கள் கொலை செய்யப்பட்டமைக்குக் காரணனாயிருக்கின்றாய். அன்றியும் அக் கொலைகளெல்லாம் ஈசுவரசந்நிதானத்திற் செய்யப்பட்டன" என்று கூறும்போது எடுபட்டிருந்த திரை சிறிதே மூடியது. பூசாரிக்குப் பூவுலக ஞாபகம் வந்தது. அவன் "மகாராசாவே, இவ்வழக்கில் நான் குற்றவாளியல்லன். நான் கொலை செய்யவுமில்லை; அவ்வூரவர்களே கொன் றவர்கள்; எனக்குப் போதிய சாட்சிக ளுண்டு; எனக்காகப் பேசுவதற்குத் திற மையுள்ளவியாயதுரந்தரர்பலர்இருக்கின்ற னர்; எனக்குள்ள ஆஸ்தி முழுவதையும் செலவுசெய்தேனும் இந்த வழக்கை நடா த்தியே தீருவேன்" என்றான். பக்கத்து நின்ற கிங்கரர் சட்டிகளையும் முட்கம்பி களையும் அவனுடைய தேகத்தில் மாட்டி னார்கள். மறைத்துக் கிடந்த திரை நீக் கப்பட்டது. பூவுலக ஞாபகம் முழுவ தும் மறைந்தன. பூசாரி நீதிபதியின் தீர்ப்பை எதிர்நோக்கி நின்றனன். "அத் தனை உயிரும் உன்னைக் கொன்றே தீர வேண்டும். அதற்காக நீ அத்தனை பிற வியும் எடுக்கவேண்டும். அதன் பின் ஈசு வர சந்நிதியிற் கொலை செய்த குற்றத் துக்காகப் பதினாயிரம் தேவவருடம் நீ எரிவாய் நரகிற் கிடந்து உழலவேண்டும். உன்னைப்போன்ற பூசாரிகள் சிலர் இன் னும் அங்கிருக்கின்றார்களென்றும், அவர் கள் நீ செய்ததுபோலவே தங்கள் ஆல யங்களில் ஆடு கோழிகள் சித்திரவதை செய்யப்படுதற்குக் காரணர்களாக இருக் கின்றார்களென்றும் நாமறிவோம். உனக்கு இப்பொழுது கிடைத்த இந்தக் கதியே அவர்களுக்குமாகும். அவர்கள் இனிமே லாவது ஆடுகோழிகளை வெட்டாதொழிந் து உய்ந்து ஈடேறும் வண்ணம் இந்த வழக்குச் சமாசாரம் முழுவதும் பூவு லகிற் பிரசித்தப்படுத்தப்பட வேண்டும். அதனிமித்தம் இந்த வழக்குப் பிரதி ஒன் றை எமது சித்தபுருஷர்மூலமாகப் பூவுல குக்கு அனுப்புகிறோ"மென நீதிபதி தீர்ப் புக் கூறினர். அதன்பின் நீதிபதி கோவில் மானேசர் ஒருவருடைய வழக்கைவிசா ரணை செய்யததொடங்கினர்.

## நமது பத்திரிகாபிமானிகட்கு ஒரு விசேஷ விஞ்ஞாபனம்.

அபிமானம்பூண்ட அன்பர்காள்,

இந்துசாதன ஆங்கில 'தமிழ்ப் பிரசுரங் களின் பொருட்டுத் தங்களால் வரவேண்டிய கிரயத்தை அறவிடுதற்கும், பத்திரிகாபிமானி களைப் புதிதாகச் சேர்ப்பதற்கும் அதிகாரங் கொடுத்து நமதுஇந்துசாதனப்பத்திரிகாசிரிய ராகிய ஸ்ரீ ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை யவர்களையனுப்புகின்றேம். இவர் கொழும்பு, காலி, கண்டி, மாத்தளை, நாவலப்பிட்டி, குருணாக்கல், அனுராசபுரம் முதலிய இடங் கட்குச் செல்வர். பத்திரிகாபிமானிகளா யுள்ள நீவிரனைவரும், அவர் உங்களிடம் வருஞ்சமையத்தில் உங்களால் வரவேண்டிய பத்திரக் கிரயத்தை முற்றுகக் கொடுத்து அவர் தரும் பற்றுச்சீட்டையும் பெற்றுக் கொள்வதுடன் புதிய அபிமானிகளையுஞ் சேர்த்துக்கொடுத்து இன்னும் ஆகவேண்டிய வசதிகளையுஞ் செய்வீர்களென எதிர்பார்த் திருக்கின்றேம்.

இங்ஙனம்,
தங்கள் அன்பன்
ச. அம்பிகைபாகன்
மானேசர்.

9-4-25.

## சமாசாரம்.

காலநிலை

சென்ற செவ்வாய்க்கிழமை இந்து நன்மழை வருஷித்தது. நேற்றும் சிறுமழைபெய்தது. இன்னும் மழைக்கோலங்காணப்படுகிறது.

### சச்சிதாநந்தராஜயோகிகளின் சற்பிரசங்கம்

வருகிற 20-ந்உ (2 5-25) சனிக்கிழமை இரவு 8 மணிதொடக்கம் சுந்தமூர்த்தி சுவாமி களின் மூன்றுகாட்பிரசங்கம் மானிப்பாய் மேற்கைப்பிள்ளையார் கோயில் மண்டபத்தில் நடைபெறும்.

### இருவர்தூங்கி இறந்தனர்.

சென்ற திங்கட்கிழமை நல்லூரிலே ஒரு ஆணும் ஒரு பெண்ணும் ஒருவீட்டினுள் தூங்கி இறந்துகிடக்கக் காணப்பட்டனர்.

### அந்தியடியிலும் ஒருவர்.

சென்ற செவ்வாய்க்கிழமை அத்தியடியி லும் ஒருவர் தூங்கி இறந்தனர்.

### திருநாவுக்கரசுநாயனர் குருபூசை.

இந்த மாதம் 7-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை (சதய நட்சத்திரம்) திருநாவுக்கரசுநாயனர் சிவபதமடைந்ததினமாகும். இத்தினம் ஏழா லையிலும் வேறும்பல விடங்களிலும் கொண் டாடப்பட்டது. சூராவத்தை அம்மன்கோவி லில் சிறுவர்களது முயற்சியால், இவ்வடியார் பூசைமிகவும் சிறப்பாகநடைபெற்றது. அன் றையத்தினம் காலையில் இக்கிராமத்திலுள் ளோர் பலரும் அக்கோவில் மண்டபத்திற் கூடி சிறுவர்களாற் பாராயணம் செய்யப்பெற்ற திருநாவுக்கரசுநாயனர் புராணத்தை அன்பு டன்கேட்டு ஆனந்தமடைந்தார்கள். முடிவில், அங்குச் சமூகமழித்தவர் பலருக்கும் சிறுவர் களால் ஆக்கப்பட்ட சர்க்கரையமுது அளிக்கப் பட்டது. அந்த ஊரிலே அன்று, எங்கும் சைவசமய மணம் வீசியது. கடித.

### பெருமழை

இலங்கையிற் பல பாகங்களிலும் சென்றவா ரம் பெருமழை பெய்தது.

### இடி விபத்து.

இந்த ஏப்பிரல்மாதம் 22-ந்உ புதன்கிழமை குருநாக்கலைச்சேர்ந்த ஓர் கிராமத்தின் வய லோரத்தில் ஓர் சிறுவன் இடியினாலே தாக்கப் பட்டு இறந்து கிடந்தனன்.

### இருவர் கொலையுண்டனர்.

சென்ற வியாழக்கிமை கொழும்பிலேயுள்ள பலசரக்குக்கடை ஒன்றில் பணவிஷயமாக உண்டான கலகத்தினால் எபிரகாம் என்னுமொ ருவனும் சார்ல்ஸ் என்னுமொரு சிறுவனும் கொலைசெய்யப்பட்டனர்.

### துணிகாரமான துப்பாக்கிப்பிரயோகம்.

கொழும்பிலே அபயசேகரா என்னுமொரு வர் மிஸ்ரர் பெறரு என்னும் பிறக்ரர் ஒருவரு டைய கந்தோரினுட் புகுந்து, நீதிஸ்தலவியாச் சியவிஷயமாக அங்கிருந்த ஒருபெண்ணைச் சுழல் துப்பாக்கியினாற் சுட்டபின் துப்பாக்கிச் சத்தங்கேட்டு அங்குச்சென்றவேதிருவரையும் சுட்டான். பொலிசர் அபயசேகராவைச் சிறை ப்படுத்தினர். சுடுபட்ட மூவரும் வைத்திய சாலையிலே ஆபத்தான நிலையிலிருக்கின்றனர்.

### இருபிள்ளைகள் கிணற்றில் வீழ்ந்து இறந்தனர்.

சென்ற வெள்ளிக்கிழமை கொழும்பிலே மாதாம்பிட்டி என்னுமிடத்துள்ள இருபிள்ளை கள் அயலிலுள்ள தோட்டத்துட் சென்று கல்கொட்டைகளைப் பொறுக்கி எடுத்துக் கொண்டு கையிலுள்ள சேற்றைநக்கழுவும் பொருட்டுக் கிணற்றின் பக்கலே அடைந்தார் கள். பெண்பிள்ளை அக்கிணற்றிலே தண்ணீர் அள்ளும்போது தவறி வீழ்ந்தாள். அவள் தம்பியாகிய மற்றப்பிள்ளையும் அவளைமீட்கும் பொருட்டுக் கிணற்றினுட்குதித்தான். அய லில் ஒருவருமில்லாமையினால் இருவரும் உட னேமாண்டார்கள்.

### வெள்ளவத்தைத் திருக்குறட் பயிற்சிக் கழக வருடாந்தக் கூட்டம்.

இக்கழகத்தின் முதலாவது வருடாந்தக் கூட்டம் சென்ற ஞாயிற்றுக்கிழமை டை கழக மண்டபத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற் றது. அத்தருணம் சச்சிதாநந்தராசயோகிகள் சபாநாயகராய் அமர்ந்து திருநாவுக்கரசுநாய னாது திவ்வியசரித்திரத்தில் ஓர் பாகத்தைப் பக்கவாத்தியசகிதமாகப் பிரசங்கம்செய்தார் கள். அன்று அதிகமழைபெய்ததாயினும் கரு மங்கள் எல்லாம் இனிது நடைபெற்று நிறை வேறின. வருடாந்த அறிக்கைப்பத்திரம்வாசிக் கப்பட்டது. அதன் சுருக்கம் பின்வருமாறு: இக்கழகம் இரத்தாட்சிவருடம் சித்திரைமாதம் 16-ந் திகதி திங்கட்கிழமை வெள்ளவத்தையி லே பெரியதெருவிலுள்ள 642-ம் இலக்க வீட்டில் ஆரம்பிக்கப்பட்டது. மேல்நாட்டுப் போலிநாகரிகம்பழக்கவழக்கம்உடைநடைபாவ னை முதலியவற்றை ஒழிப்பதும், செந்தமிழ் ஆராய்ச்சி சைவசித்தாந்த நூற்பயிற்சி ஆலய சேவை செபம் தவம் தியானம் அடியார் சேவை தேவாரதிருவாசக பாராயணம் முத லியவற்றை நன்னிலைப்படுத்துவதும் இக்கழகத் தின் நோக்கங்களாம். இவ்வருடத் தில் வாரமிருமுறை டை கழகவகுப்பு நடை பெற்றது. பல அறிவாளிகளால் அரிய விஷ யங்கள் காலந்தோறும் பிரசங்கஞ் செய்யப் பட்டன. சமயகுரவர் நால்வர் குருபூசையும் ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்கள் குருபூசை யும் சிறப்பாகநடைபெற்றன. தேவாரதிருவா சகமென்னுமிவற்றிற்சித்தியெய்திய இருவர்க்கு விசேஷ பரிசுகள் கொடுக்கப்பட்டன. இக் கழகம் "கலைமகள்" என்னும் ஓர் மாதப்பத்திரி கையை நடத்துகின்றது. இப்பொழுது இது 600 கையொப்ப நேயர்களையுடையது. இக் கழகத்தின்வருடாந்தவரவு ரூபா 524 சதம்62. இப்பொழுது கையிருப்பது ரூபா 51 சதம்04.

### ஜெர்மனிய பிரசாதிபதி.

ஜெர்மனிதேசப் பிரசாதிபதித்தெரிவு சென்ற திங்கட்கிழமை நடைபெற்றது. இந்த விஷய மாக முடியரசு குடியரசு என்னும் இருகட்சியி னரும் தெருக்கள்தோறும் கொடிகளுடன் கூக் குரலிட்டுத் திரிந்தனர். ஈற்றில் மிஸ்ரர் வொன் கின்டன்பேர்க்கே பிரசாதிபதியாகத் தெரிவு செய்யப்பெற்றனர்.

### தேகவியோகம்.

வண். வைத்தீஸ்வரசுவாமிகோவில் ஆதீன கர்த்தராகிய ஸ்ரீ. பொ. க. பொனுச்சாமிச் செட்டியாரவர்களின் சகோதரராகிய ஸ்ரீ. வைத்தியலிங்கச்செட்டியாரவர்களின் ஏகபுத்தி ரன் சென்ற சோமவாரத்தன்று தேகவியோக மாயினர். காதல்மகவை இழந்து துயருறும் பெற்றோருடனும் சுற்றமித்திராதியோருடனும் நாமும் அனுதாபமுறுகின்றேம்.

அநுபந்தம் பார்க்குக.

## அடைவுநகைவிற்பனவுவிளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக்கட்டளைச் சட்டத்தின்படி லைசென்ஸ்பெற்று அடைவு பிடிக்கும் திரிகோணமலை 6-ம் நம்பர் காசுக் கடைவீதி. மு. தாமோதரம்பிள்ளை. &. இராச லிங்கம் என்பவர்களிடம் அடைவுவைக்கப் பட்டு இப்போது தவணைதப்பி டை சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்க வேண்டிய நகைகளின் விபரம்.

| இல. | திகதி | ரூ | ச. | நகைகளின் விபரம். |
|---|---|---|---|---|
| 1923ஆ 11-ம்மீ. | | | | |
| 788 | 1 | 12 | | செருகுதோடு சோடி 1 |
| 803 | 1 | 13 | | இதட்பூ 1 |
| 810 | 3 | 20 | | கற்தோடு சோடி 1 |
| 827 | 5 | 10 | | வெ. பழையகறளை சோடி1 |
| 839 | 5 | 6 | | தோடுசோடி 1 சு. இ. |
| 853 | 6 | 15 | | பூசாந்திரமுடன் மணிக் கோர்வை 1க்கு மணி 12 |
| 855 | 6 | 80 | | நடு. பத. பூராணட்டியல் 1 |
| 956 | 13 | 18 | | சிறுபின் பூசாந்திரமுடன் மணி |
| 969 | 14 | 7 | | சிறுமணிக்கோர்வை1 பி.இ. |
| 1070 | 20 | 13 | | தக்காப்பு 1 |
| 1077 | 20 | 8 | | வெ. பீலிமயிலடி சோடி 1 வெ. சங்கிலித்துண்டு 1 |
| 1085 | 21 | 7 | 50 | மேலீடு சோடி 1 கல் மூக் குத்தி 1 |
| 1107 | 23 | 13 | | பவுண்காப்பு 1 |
| 1154 | 26 | 13 | | கற்தோடு சோடி 1 |
| 1164 | 27 | 8 | | சிறுமணிக்கோர்வை1 பி.இ. |
| 1172 | 28 | 16 | | தோடுசோடி 1 |
| 1192 | 30 | 32 | | பூசாந்திரம் பின் உடன்மணி 4 சிறுமணிக்கோர்1 பி.இ. |
| 1193 | 30 | 7 | | பூசாந்திரமுடன் மணி 19 |
| 12-ம்மீ. | | | | |
| 1200 | 1 | 17 | | பழைய சிறு பொன்தாலிக் கொடி 1 |
| 1207 | 1 | 50 | | பதபூராணட்டியல்1 க.மு.வி. |
| 1217 | 1 | 18 | | படக்கூர் 1 வெ. கொலிசு சோடி 1 |
| 1235 | 2 | 35 | 04 | கற்தோடு சோடி 1 |
| 1239 | 3 | 18 | | சிறு சவுக்கமணிக் கோர்வை 1க்கு மணி 29 |
| 1254 | 4 | 8 | | வளையல் 6 |
| 1274 | 5 | 15 | | சிறு இதட்பூ1கற்படக்கூர்1 |
| 1311 | 8 | 9 | | சிறுதங்கக்காப்பு 1 தோடு சோடி 1 உடையல் |
| 1336 | 9 | 10 | | பொன்செருகுதோடு சோ.1 |
| 1343 | 10 | 10 | | படக்கூர் 1 |
| 1349 | 10 | 7 | | தோடுசோடி 1 சு. இ. |
| 1371 | 11 | 14 | | கற்தோடு சோடி 1 |
| 1403 | 13 | 10 | | பிரப்பமணி 25 வெ. குழற் காப்புச்சோடி 1 வெ. அ வாக்கூடு சோடி 1 |
| 1409 | 13 | 9 | | சிறுதட்டுக் கிச்சி 1 |
| 1422 | 14 | 25 | | இதட்பூ 1 சவுக்க மணிக் கோர்வை1 |
| 1430 | 15 | 9 | | மோதிரம் 1 |
| 1441 | 16 | 18 | | சிகப்புக் கடுக்கன் சோடி 1 சு. இ. சிறு செருகுதோடு சோடி 1 சு. 1 இ. |
| 1443 | 16 | 10 | | படக்கூர் 1 |
| 1460 | 16 | 25 | | கல்டிம்மிபுடன்பொன்சறடு1 |
| 1461 | 16 | 40 | 04 | பழையதாலிக்கொடி 1 |
| 1467 | 17 | 7 | | பொன்தோடுசோடி 1 நசி. |
| 1469 | 17 | 110 | 04 | மணிக்கோவை1க்கு மணி32 |
| 1472 | 17 | 10 | | சவுக்கமணியும் பிரப்பமணி யும் கலந்தகோர்வை 1 உ. |
| 1487 | 17 | 40 | | தாலியுடன் பழைய தாலிக் கொடி 1 |
| 1520 | 20 | 75 | 04 | பவுண் 6 |
| 1587 | 24 | 10 | | முத்துதண்டைமணிக் கோர் வை 1க்கு மணி 44 |
| 1598 | 25 | 18 | | கற்செருகுதோடு சோடி 1 |
| 1628 | 26 | 12 | | சிகப்புக்கடுக்கன் சோடி 1 சு. இ. |
| 1630 | 26 | 6 | | கொப்புச்சிமிக்கி சோடி 1 |
| 1638 | 27 | 16 | | படம் 2 பொன்செருகுதோ டு சோடி 1 |
| 1641 | 27 | 60 | | பொன்சறடு 1 பொன்பூரா ணட்டியல் 1 |
| 1690 | 30 | 35 | | கைச்சங்கிலி சோடி 1 |
| 1722 | 31 | 7 | | பொன் கொப்புச்சிமிக்கி சோடி 1 |
| 1725 | 31 | 12 | 04 | சிறு தங்கக்காப்பு சோடி 1 |
| 1924ஆ தைமீ. | | | | |
| 1809 | 5 | 6 | 04 | மேலீடுசோடி 1 |
| 1819 | 6 | 10 | | பதக்கம் 1 |
| 1865 | 8 | 16 | 54 | படக்கூர் 1 வெ. கொலிசு சோடி 1 |
| 1936 | 12 | 70 | | பொன் சம்புருத வளையல்4 |
| 1947 | 12 | 7 | | வெ. கறளை சோடி 1 |
| 1956 | 13 | 26 | | வெ. பாதசரம் சோடி 1 |
| 2041 | 19 | 11 | | பூசாந்திரம் 1 பழுது |
| 2103 | 28 | 15 | | பத. சிறுசறடு 1 |
| 2129 | 31 | 6 | | சிறு இதட்பூ 1 |
| 2131 | 31 | 6 | | சிறு தங்கமோதிரம் 4 |
| 2-ம்மீ. | | | | |
| 2151 | 2 | 12 | | பதக்கம் 1 கல்விழு. |
| 2166 | 3 | 14 | | பொன்மயிர்மாட்டிசோடி 1 மு. இ. |
| 2178 | 4 | 8 | | மோதிரம் 1 |
| 2188 | 5 | 8 | | பூசாந்திரம்1, வெ. சிறுஅரை ஞாண் 1, வெ. வெட் டுக்காப்புசோடி 1 |
| 2202 | 6 | 22 | | வெ. பாதசரம் சோடி 1 |
| 2223 | 9 | 6 | | படக்கூர் 2, அரசாதுப்பூ சோடி 1 |
| 2232 | 9 | 12 | 50 | சிறு 2 பட்டுமணி 1 பி. இ. உடை. |
| 2234 | 10 | 10 | | வெ. கறளை சோடி 1 |
| 2254 | 11 | 12 | | கல்மோதிரம் 1, படக்கூர் 1 |
| 2256 | 11 | 50 | | பூராணட்டியல் 1 |
| 2291 | 15 | 10 | | வெ. அடுக்குக்காப்பு சோ1 |
| 2294 | 15 | 8 | | வெ. சிறு அடுக்குக்காப்பு சோடி 1 |
| 2306 | 16 | 15 | | பழைய சற்றோடு சோடி 1 |
| 2323 | 18 | 18 | | அறுக்குத்து 12 ச. இ. |

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி லைசென்சு பெற்று அடைவுபிடிக் கும் வண்கிழக்கு நா. மு. த. சொக்கலிங்கம் செட்டியாரிடம் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி டை சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்தஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைக ளின் விபரம்:—

| நம். | உ | ரூபா | ஊரும் பெயரும் | நகை விபரம். |
|---|---|---|---|---|
| 1924ஆ மார்ச்சுமீ | | | | |
| 127 | 7 | 56 | சுவாமி நன்னித்தம்பி தம்பிமுத்து | பொன் பட்டணக்காப்பு சோடி 1 |
| 130 | 8 | 50 | உடுவில் குமாரசாமி சண்முகம் | பொன் கொலுசுக்காப்பு சோடி 1 |
| 143 | 11 | 90 | தெல்லிப்பழை அருளம்பலம் தில்லையம்பலம் | பொன் சிறு கெட்டிக்கொலுசுக்காப்பு சோடி 1 |
| 154 | 15 | 20 | சண்டிக்குளி சின்னத்தம்பி செல்லையா | பொன் 14 புஸ்பராகம் வைத்த தோடு சோடி 1 |
| 161 | 16 | 40 | சோனகதெரு முகம்மதுமெய்தீன் உசனர் | பொன் முகப்பில்லாத பழுதுள்ள அரை ஞாண் கொடி 1 |
| 170 | 18 | 90 | சொக்குவில் மேற்கு கதிரவேலுப்பத்தர் கந்தையா | பாஞ்சாலி வயிரச்சன்னம் 2 |
| 223 | 29 | 55 | சண்டிக்குளி சின்னத்தம்பி செல்லையா | பொன் பழுதுள்ள பட்டணக்காப்பு சோ.1 |
| எப்பிரல்மீ | | | | |
| 262 | 7 | 12 | வண்மேற்கு சுப்பருபல்செட்டி கோவிந்தருஜனு | சிகப்புக்கல்க்கடுக்கன் சோடி 1 |
| 278 | 11 | 12 | புங்குடுதீவு முத்துக்குமாரு பரகிருபசிங்கம் | பொன் சாதா மோதிரம் 1 |
| 279 | ,, | 60 | மூளாய் சின்னத்தம்பி கிருஷ்ணபிள்ளை | பொன் பட்டணக்காப்பு சோடி 1 |
| 285 | 12 | 20 | சொக்குவில் கிழக்கு குலசேகரம்பிள்ளை விஞசித்தம்பி | பொன் சாதா மோதிரம் 1 |
| 305 | 18 | 25 | சங்கானை சின்னத்தம்பி பொன்னையா | பொன் சரட்டட்டியல் 1 |
| 309 | 19 | 65 | சொக்குவில் தம்பாபிள்ளை அருளம்பலம் | பொன்முகப்புடன் கொலுசுக்காப்புசோ.1 |
| 316 | 21 | 120 | வண்கிழக்கு சிதம்பரசுப்பையாசெட்டியார் வைத்தியலிங்கம்செட்டியார் | மஞக் கன் சிகப்பு டிம்மி பதக்கத்துடன் மூன்றுவரிசைக் கல்லட்டியல் 1 |
| 328 | 23 | 100 | ஆரியகுளத்தடி சின்னத்தம்பி சுப்பிரமணியம் | பொன்பூக்காப்பு சோடி 1 |
| 332 | 23 | 75 | சாவகச்சேரி அப்புக்குட்டியார் தம்புப்பத்தர் | பொன் பட்டணக்காப்புச்சோடி 1, இமிட்டேசன் கல்மோதிரம் 1 |
| 334 | 23 | 175 | ஆனைப்பந்தியடி சுப்பையா பொன்னுத்துரை | பொன் பூக்காப்புசோடி1, டிம்மிப் பதக்கத்துடன் சங்கிலியட்டியல் 1, சாதாமோதிரம் 1, டை தடை இரண்டுக்கும்1 |
| 341 | 23 | 50 | சிறும்பியடி செல்லையா சாமுவேல் | பொன்குண்டுச்சங்கிலி 1 |

விற்பனவு:—ருரோதனஹுஸ் சித்திரைமீ 20-ந் திகதிக்குச்சரியான 1925ஆ மேமீ 2உ சனிக்கிழமை காலை 10 மணியளவில் எடுபட்டநகை பிறகேம்பலாக யிகுதி பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வண்கிழக்கு அரு. செல்லையா உடையார்,
வெர்டுஸ்மேஸ்தர்.

(Mis. 037.)

| | | | |
|---|---|---|---|
| 2324 | 18 | 7 | தகட்டுடன் கூடு 1 பழுது |
| 2340 | 20 | 100 4 | ஜூத்தபட்டிலேமாலை 1 |
| 2360 | 22 | 45 | சிறு பீலிக் காப்புசோடி 1 க. இ |
| 2399 | 26 | 10 | வெ. பகாலிக சோடி1 பழு |
| 2404 | 27 | 8 04 | சிறுவிலங்கு 2 வெ. அசா ஞாண் 1 க. இ. குறிபல் |
| 2414 | 28 | 6 | சிறு இதட்டு 1 |

விற்பனவு:— குரோதன ஞு வைகாசி மீ 4-ம் திகதிக்குச் சரியான 1925-ம் ஞு மேமீ 17-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் எடுபட்ட சுகை பிறகேக்கலாக யகுதி நெடி கடையில் பிரசித்த வலத்தில் விற்கப்படும்.

வி. பொ. விசுவநாத உடையார்
27—4—25 வெர்திஸ்மேஸ்தர்,
(Mis 639.) திரிகோணமலை.

---

படிக்கப் படிக்க இனிக்கும்!
நினைக்க நினைக்க மணக்கும்!!

## சரீர மர்ம சாஸ்திரம்.

தமிழ்ப்பாஷையில் இவ்வளவு பூரணமான இரகசிய சாஸ்திரம் இதுவரையில் எவராலும் பகிரங்கமாய் வெளியிடப்படவில்லை. இதில் ஸ்திரீ புருஷலக்ஷணங்களும், அவர்களது சரீர அமைப்பும், அவர்களின் நேர்மையான உபயோகங்களும், ரதிமன்மத சிருங்கார ரஹஸியங்களும், ஆண் பெண் சிசு உற்பத்தி விபரமும், ஸ்திரீ புருஷர்களுக்கு உண்டாகும் வியாதிகளும், அதைப் போக்கத்தக்க சிகிச்சைகளும், மகா ரிஷிகளால் மர்மமாக ஆதியில் எழுதிய இல்லற இன்பங்களும் விவாகமானவர்களுக்கும் இனிமேல் விவாகம் செய்துகொள்ளும் சிறுவர் சிறுமிகளுக்கும் இன்றியமையாத நூல். 64 படங்களுடன் சுமார் 200 பக்கங்களுடைய 4-ம் பதிப்பு புத்தகம் விலை ரூ 1 தபால் செலவு அணா 0—7—0

மாணிக்க விலாசம் பிரஸ்,
12, அருணாசல முதலி வீதி, சென்னை.
(Q. 62)

---

இனும்! விலை ஜாப்தா. இனும்!!

## பிரசித்திபெற்ற மைசூர் ஊதுவத்திகள்.

| | | | | |
|---|---|---|---|---|
| தர்பார்வத்தி சேர்1க்கு | ரூ.10முதல் | | ரூ.24வரை. | |
| அம்பர்வத்தி | ,, | 3 | ,, | 18 ,, |
| கஸ்தூரிவத்தி | ,, | 4 | ,, | 12 ,, |
| பால்வத்தி | ,, | 8 | ,, | 16 ,, |
| ஜவ்வாதுவத்தி | ,, | 4 | ,, | 10 ,, |
| புனுகுவத்தி | ,, | 3 | ,, | 6 ,, |
| பன்னீர்வத்தி | ,, | 1 | ,, | 4 ,, |
| மத்தாப்புவத்தி | ,, | 1 | ,, | 3 ,, |

## மைசூர் வாசனை வில்லைகள்.

கஸ்தூரிவில்லை, கேசரிவில்லை, ஜவ்வாது வில்லை, புனுகுவில்லை, புதுக்கோட்டைவில்லை, பச்சைவில்லை. கிரயம் வில்லை 1க்கு 0-8-0 முதல் 1-0-0, 1-8-0, 2-0-0, 2-8-0, 3-0-0, 4-0-0, 5 0-0 வரை.

### அரகஜா
(ஜவ்வாதுகலந்த சந்தனம்.)

தோலா 1-க்கு ரூபா 2-0-0 முதல் ரூபா 3-8-0 வரை.

### தசாங்கம்.

சேர் 1-க்கு ரூபா 1-8-0 முதல் ரூபா 2-0-0 வரை.

### சுத்தமான சந்தன எண்ணெய்.

ஒரு அவுன்ஸ் பாட்டல் 1-க்கு விலை ரூபா 2-0-0.

### "சந்தனமரத்தூள்".

பெரிய டப்பா 1-க்கு விலை ரூபா 3-0-0
சிறிய டப்பா 1க்கு விலை ரூபா 1-12 0

### பன்னீர் (முதற்றரம்)

பெரிய பாட்டல் 1-க்கு விலை ரூபா 3-8-0
சிறிய பாட்டல் 1-க்கு விலை ரூபா 2-0-0

### "மைசூர் அத்தர் தினுசுகள்".

கஸ்தூரி, மல்லிகைப்பூ, தாழம்பூ, மருக்கொழுந்து, குலாபி, செண்பகப்பூ, இரா, மஸ்மா முதலிய அத்தர்கள் தோலா 1க்கு விலை ரூபா 5 முதல் 10, 12, 15, 20, 25 வரை.

தங்களுக்குத் தேவையான வாசனைத்திரவியங்களுக்கு உடனே எழுதுங்கள்.

விலாஸம்:—
எச். சி. சந்திரா & கம்பெனி,
பெங்களூர் சிட்டி,
(Q. 61) (இந்தியா).

---

"ஸ்ரான்டேர்ட்"

## கொழுக்கியோடுகள்:
(Standard Tiles)

பின்வரும் நியாயங்கள் பற்றியே நாம் இந்த ஸ்ரான்டேர்ட் ஓடுகளைத் தருவித்து விற்கின்றோம்:—

முதலாவது, இந்தஓடுகள் மிகப்பாரங்குறைந்தனவும்.

இரண்டாவது, இவைகள்நெடுங்காலத்திற்கு நின்று பிடிக்கத்தக்கன.

மூன்றாவது, இந்த வடஇலங்கையின் தேச சுவாத்தியத்திற்கு இயைந்த ஓடுகள் இவைகளேயாம். இந்த ஓடுகள் உஷ்ணகாலங்களிற் குளிர்ச்சியையும் சீதளகாலங்களில் உஷ்ணத்தையும் தரும் தன்மையன.

இந்த ஓடுகளைச் சென்ற நாலு வருடகாலமாக நாம் தருவித்துவிற்றுவருகின்றோம். இந்தநாலு வருடகாலத்தில் நாங்கள் ஆச்சரியப்படத்தக்க விதமாக இவை செலவழிகின்றன. மற்றும் ஓடுகளிலும்பார்க்க இவை சிறந்ததென்பதற்கு இந்த ஒரு நியாயமுமே போதிய சான்றாகும்.

S. வீரகத்திப்பிள்ளை,
சோல் ஏஜண்டு,
(H. 34.) யாழ்ப்பாணம்.

---

புதிய தினுசுகள் சகாய விலைகள்

### நூதனமான பட்டு ஜவுளிகள்.

எங்களிடம் தற்காலம் நாகரிகத்திற்கேற்ற பனாரிஸ், பெங்களூர், சேலம், கோயம்புத்தூர், கொர்னாடு, காஞ்சிபுரம், கும்பகோணம், தஞ்சாவூர், பாடிப்பேட்டை, பட்டணம், பாரிஸ் பட்டு முதலிய தினுசுகளில் சுத்தமானபட்டுச்சேலைகளும் ஜரிகைநூல் சேலைகளும், பட்டுச்சரிகைச் சால்வைகளும் தினுசுகளும் தயாராயிருக்கிறது.

ஒருதடவை வாங்கிப் பார்த்தால் அதின் நயம் தெரியும். வெளியூர் ஆடர்கள் வி. பி. மூலமாக அனுப்பப்படும்.

பி. ஆர். அனந்தநாராயணய்யர்,
ஜவுளி வியாபாரம்,
205, செட்டித்தெரு,
கொழும்பு.

P. R. Ananthanarayana Iyer,
Silk & Cloth Merchant,
205, Sea Street,
COLOMBO.
(Y. 39).

---

யாழ்ப்பாணம் இரகுநாதையர்,

### குரோதனஞு வாக்கியபஞ்சாங்கம்.

உலகப் பிரசித்தி பெற்றதும், சகலராலும் கைக்கொள்ளப்படுவதும் 68 ஞு கால அநுபவமுடையதுமான பஞ்சாங்கம் இதுவே. இதன் விலை சதம் 30. (அணா 5.)


6 பிரதி ரூபா 1-56. 12 பிரதி ரூபா 3-12. 100 பிரதி ரூபா 25-00 வெளியூரவர் (இந்தியா இலங்கை)களுக்கு 12-க்குமேல தபாற்செலவு இனும். 12-க்குமேல் எடுப்பவர்களுக்கு குரோதனஞு தமிழ் இங்கிலீஸ் தேதிகளுள்ளதும் விசேட காலங்கள் குறிக்கப்பட்டதுமான அழகிய காலண்டர்1 இனும். 100 காலண்டர் ரூபா4.

தனிப்பஞ்சாங்கம் வேண்டுவோர் 36 சதத்துக்கும், காலண்டருக்கு 9 சதத்துக்கு முத்திரை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். 6 சத முத்திரை அனுப்பினுல் விரிவான புத்தகக் காட்லாக் இனும்.

இ. சி. இரகுநாதையர்,
சோதிடபரிபாலனமடம்,
(Q. 59.) கொக்குவில், யாழ்ப்பாணம்.

---

### தங்க மலாம் பூசிய ரிஸ்லெட் கெடியாரம்.



இந்த கெடியாரம் பார்வைக்கு பொன் கெடியாரம் போலவேதோற்றும். வெகு அழகாயும் ஆச்சரியமாயும் இருக்கும். சரியான டைம் காட்டக்கூடியது. வெகு காலம் நன்றாய் போகக்கூடியது.

பொன் கில்ட் ரிஸ்லெட் கெடியாரமும் பொன் கில்ட் ஸ்பிரிங் பட்டையுடன் 6-8 0.

ஸ்ட்ரேட் செடல்மெண்டுக்கும் F. M. S. மலேயாஸ்ட்ரேட்டும் முன்பணமில்லாமல் C. O. D. மூலியமாக அனுப்ப முடியாது.

விலாசம்:—கனக அண்டு கம்பெனி,
(H. 35) பார்க்டவுன் போஸ்ட், மதராஸ்.

---

### சேலம் ஜவுளி தினிசுகள்.

எங்களிடம் சொந்தத் தறிகளில் நெய்யப்பட்ட பட்டுத்தினிசுகளும், பட்டும் பருத்தியும் கலந்த தினிசுகளும், தாளம்பூக்கரைப் புடைவைகளும், வெள்ளை ஜவுளி தினிசுகள், குண்டஞ்சு, சன்னஞ்சு, பவுனபேட்டு, இன்னும் பல மாதிரிகள் இருக்கிறது. விலாசம்தெரிவித்தால் பிறைஸ் லீஸ்ட் இலவசமாய் அனுப்புகிறோம்.

விலாசம்:
கோ. ப. சி. அ. வேணுகோபால்செட்டியார் அன்ட் பிறதர்ஸ்,
ஜவுளி & கமிஷன் ஏஜண்டு,
தந்தி விலாசம்: வேணுகோபால், சேலம். — குகை, சேலம். S. I.
(H 32.)

---

பிரபஞ்ச சுகத்திற்கு திவ்விய ஔஷதம்! 2 மணிநேரத்தில் அபூர்வ குணம்!!

இந்த மருந்து இராத்திரிவேளையில் ஒரு மாத்திரை சாப்பிட்டால் வீரியம் எவ்வளவு நீற்றுப் போயிருந்தாலும் அதைக் கெட்டிப்படுத்தி 2 மணி நேரத்திற்குள் அதிகமான ரதி சக்தியைக் கொடுக்கும்.

மூன்று நாள் சாப்பிட்டால் வீர்ய நஷ்டம் எவ்வளவு காலமாக இருந்தபோதிலும் அதைத் தவறாமல் கட்டுப்படுத்தும் இரண்டு புட்டிகள் சாப்பிட்டால் தரப்யாலத்திலு அண்டாகும் நபும்ஸகத்வம் போக்கி நரம்புகளுக்கு அதிக பலத்தைக்கொடுத்து அதிகமான யௌவனத்தைக் கொடுக்கும். ஒருமுறை தருவித்து உபயோகித்தால் இதன் குணம் தங்களுக்கே தெரிய வரும். கடிதங்கள் ரகஸ்யமாய் வைக்கப்படும். 20 மாத்திரைகள் கொண்ட சீசா 1-க்கு ரூபா 2—0—0 வி. பி. தபால் சார்ஜ் வேறு.

ஆர்ய வைத்தியாஸ்ரமம்,
13. (H) பைராகிமடம் கோவில்வீதி,
(Y. 33) ஜி. டி. மதராஸ்.

---

## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையும் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனல் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனுலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக்கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதாரு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம் சாம்பிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது,

இதனுல் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம் பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்க வாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்தலேகியத்தின் விலை முத்தல் ஒன்றுக்கு ரூபா ௨0. அரைமுத்தலுக்கு ரூபா ௧0. கால் முத்தலுக்கு ரூபா ௫ தாபற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவாயிராச்சியப்பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததினு முன் மணி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
சு. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகதாரவைத்தியசாலை,
காத்தான்குடி போஸ்டு,
மட்டக்களப்பு,
(M. 36.) சிலோன்.

---

அநேக பரிசுகளும் தங்கமெடல்களும் நற்சாக்ஷிகளும் பெற்று உலகப் பிரசித்தி அடைந்திருப்பதோடு 25-8-23-ல் சென்னையில் நடந்த வைத்திய கான்பரன்ஸ் அண்டுமருந்துக் கண்காட்சியில் இவர் மருந்துக்கள் பஸ்ட்கிளாஸ் (முதல்தர) தேவ ஔஷதங்களெனத் தங்க மெடலும் வைத்தியபதி என்ற பட்டமும் பெற்றவர்.

குஷ்டரோகிகளே!

நீங்கள் இனி இந்த நரக வேதனையில் அழுந்தாமல் மன உல்லாசமாக இருக்கலாம், பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்தரவாதம்.

## நமது தாம்பிர பஸ்பத்தின் மகத்துவம்.

நிரந்தரமாகக் கைவிடப்பட்ட அநேக குஷ்டரோகிகளை சௌக்கியப் படுத்தி விட்டது.

திமிருடன் உள்ள குஷ்டம், குஷ்டரோய், தடிப்பு, அரிப்பு, கை கால் சுரணையற்று காது, மூக்கு, உதடு, கை கால் சுரணையுள்ள பெருநோய் உள்ளவர்களும் கண்சிவந்து வாய் மூக்கில் தர்வாடை வீசும் மூக்கு அழுகிய அசாத்திய ரோகமுடையவர்களும் சரீரமே ரணமாகி விரல்கள் அழுகிப்போன ஆறாத ரணங்களும், வெள்ளை, வெட்டை, மொழிகளில் சூலை, வீக்கம், வலி கை கால் குடைச்சல், கிரந்தி, நமைச்சல், மேகஊரல், பத்து, அரிகிரந்தி, தடிப்பும நரம்பு பிடித்து கை காலை முடக்கிவிடும் மேகவியாதிகளும், வெணமேகம், செம்மேகம், கருமேகம் முதலிய சகலவித சர்ம வியாதிகளுக்கும்,

## நமது தாம்பிர பஸ்பம்.

சாப்பிடுங்கள்.

முப்புவினுல் தளுக்கற நீற்றியது; களிம்பற்றது; வாந்தி முதலிய கேடுதிகள் ஒன்றும் செய்யாது. பத்தியமில்லை. வியாதிகளை விவரமாய் எழுதவும்.

80-வேளை பஸ்பம் ரூபா 40. 40-வேளை பஸ்பம் ரூபா 20.
20-வேளை ரூபா 10 ஏழைகள் என்று எழுதினுல் பாதிவிலைக்கு அனுப்பப்படும்

காந்தி! தேஜஸ்!! பலம்!! தீர்க்காயுள் சந்தானவிர்த்தி,
அடையப் பிரியப்படுகிறீர்களா! அப்படியானுல் பழனி, T. R. K.

## தங்கபஸ்பம்.

சாப்பிடுங்கள் (பஸ்பத்தின் மகிமை).

"முடியாத பற்பமது குன்றியுண்ண முனையான காமமது சிவந்து மின்னும்
பிடியாத மதயானை பெலனுக்கொக்கும் பெண்களுடனுபோகம்பண்ணி ஞக்கால்"
என்ற இக்கவியால் பஸ்பத்தின் பெருமை நன்கு விளங்கும். அபார சக்தி வாய்ந்தது. ஜீரண சக்தி, பசி, ரத்தவிர்த்தி உண்டாக்கும் இந்திரிய விருத்தியும் இந்திரிய புஷ்டியும், கொடுத்து இல் வாழ்க்கையில் இன்பத்தைக்கொடுத்து ஊக்கத்தைத் தருவதில் இதற்கு மிஞ்சின ஔஷதமில்லை. பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்தரவாதம்.

100-நாள் பஸ்பம் ரூபா 35 50-நாள் பஸ்பம் ரூபா 20. 25-நாள் பஸ்பம் ரூபா 10., 10நாள் ரூ 5.

## நீரழிவுக்கு ஆப்ரேக் செந்தூரம்.

சாஸ்திபோகும் நீரை நிறுத்தும், தாகத்தைக் குறைக்கும், நீரிலுள்ள சர்க்கரையையும்சரீர வெளுப்பையும் மாற்றி தேஜஸ் பலம் கொடுக்கும். இதோ ஒருமருந்துக்கும் வசப்படாத வியாதி இந்தமருந்தில் தீருவது வெகு ஆச்சரியமாக இருக்கிறது. இப்படி சிரேஷ்டமான மருந்து இதுவரை வெளிவரவில்லை.

40-நாள் மருந்து ரூ. 20, 20-நாளுக்கு ரூ. 10. அனுமான ஆவரை கிருதம் 80 உருண்டை ரூ 10

## தாளக பஸ்பம்.

எவ்வளவு நாட்பட்ட காசம் க்ஷயம், ஈளை, இருமல், ஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு அவசியம் தீரும். புட்டி ரூபா 4.

## நாக பஸ்பம்.

உள் மூலம், ரத்தமூலம், சூலமூலை, மலபந்தம் முதலிய மூலம் ஒன்பதும் வெகு சீக்கிரம் குணமாகும். ஆப்ரேஷன் தேவையில்லை புட்டி ரூபா 4.

## பிரமேக நிவாரணி.

ஒரேவேளையில் உங்கள் கஷ்டத்தை நிவிர்த்தி செய்யும், பொறுக்கமுடியாத வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், தாதுமேகம் உடனே நிற்கும். புட்டி ரூபா 2.

## இதோ? ரசமணி.

பூஜைக்குரந்தது வாசிதம்பிக்கும் சகல வசியம், தனலாபம், கீர்த்தி, நினைதகாரியசித்தி, தொழிலபிவிருத்தி, புத்திரசந்தானம், மென்மேலும் பெருகும், தொத்துநோய் அவயிருத்து மோகபற்று, சொரி சிரங்கு முதலியவை தீரும். மணி 1-க்கு ரூபா 2. 6-மணி ரூபா 10-0-0.

எந்த மருந்துக்கு ஆர்டர் செய்தாலும் கடிதம் எழுதும்போது விவரமாய் இரேக கூறுகளைத் தெரிவிக்கவும், பினங்கு, சிங்கப்பூர்த்தேசவாசிகள் முன்பணம் அனுப்பவும்.

வைத்தியபதி, டி. ஆர். கருப்பணபிள்ளை,
ஆயுள்வேத வைத்தியசாலை, பழனி.
(Q. 56. B.)

---

வான்முகில் வழாது பெய்கமலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by S. Ampikaipagan, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.